தினமணி

## சீசன் முடியும் நிலையில் மா விலை அதிகரிப்பு

First Published : 23 Jun 2011 12:12:54 PM IST

ராஜபாளையம், ஜூன் 22: ராஜபாளையம் பகுதியில் மாம்பழ சீசன் முடியும் நிலையில் அதன் விலை அதிகரித்துள்ளது.

ராஜபாளையம் முடங்கியார்ரோடு மற்றும் செண்பத்தோப்பு பகுதியில் அதிக அளவில் மாந்தோப்புகள் உள்ளன. இங்கு சாகுபடி செய்யப்பட்டுள்ள பஞ்சவர்ணம் மற்றும் சப்பட்டை ரக மாம்பழங்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிரபலமானவை.

கடந்த சித்திரையில் தொடங்கிய மா சீசன் ஆனி மாதம் வரை நீடிக்கும்.

கடந்த வாரம் மா விலை குறைந்து காணப்பட்டது. தற்போது வரத்து குறைந்து விட்டதால் விலை அதிகரித்துள்ளது.

சப்பட்டை கிலோ சில்லறை விலையில் ரூ. 25 முதல் ரூ. 30 வரை விலை நிலவுகிறது.

பஞ்சவர்ண ரக மாம்பழம் கிலோ ரூ. 18 முதல் ரூ. 25 வரை விலை உள்ளது.

ஜூலை மாதத்தில் விலை கூடுதலாகும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

மாங்காய்களை பறித்து வைக்கோலில் பழுக்க வைத்து விற்பனை செய்வதால், கேரள மாநிலத்தவரும், குற்றால சீசனுக்கு வருவோரும் அதிகமாக மாம்பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.

---

## எண்டோசல்பானை தடை செய்ய வலியுறுத்தல்

First Published : 22 Jun 2011 02:45:08 PM IST

தஞ்சாவூர், ஜூன் 21: மனிதர்கள், கால்நடைகளைப் பாதிக்கும் எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்தை தமிழக அரசு தடைசெய்ய வேண்டும் என்றார் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலர் பெ. சண்முகம்.
தஞ்சையில் செவ்வாய்க்கிழமை அவர் அளித்த பேட்டி:
நீலகிரி மாவட்டத்தில் எண்டோசல்பான் பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தியதால், கூடலூரில் மட்டும் 364 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 17 குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது.
மக்களையும், கால்நடைகளையும் பாதிக்கும் இந்தப் பூச்சிக்கொல்லியின் பாதிப்பு குறித்து தமிழக அரசு விரிவான ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மருத்துவ உதவிகள் செய்து தர வேண்டும்.
கேரள, கர்நாடக அரசுகளைப் போலத் தமிழகத்திலும் எண்டோசல்பான் உற்பத்தி மற்றும் விற்பனைக்குத் தடை விதிக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டப்பேரவைக் குழுத் தலைவர் ஏ. செüந்தராஜன் பேசியதற்கு அரசிடமிருந்து இதுவரை பதில் ஏதும் வரவில்லை. தமிழக அரசு இனிமேலாவது எண்டோசல்பானைத் தடை செய்ய சட்டம் இயற்ற வேண்டும்.
தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து திருவாரூரில் 3 ஊராட்சி ஒன்றியங்களிலும், நீலகிரி மாவட்டத்திலும் எண்டோசல்பான் பாதிப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.
தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற்ற வேளாண் வளர்ச்சிக்கான ஆய்வுக் கூட்டத்தில், நிகழாண்டு 115 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி இலக்கு நிர்ணயித்துள்ளதை வரவேற்கிறோம்.
புதிய அரசு நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.1,500 என நிர்ணயம் செய்ய வேண்டும். இடுபொருள்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். டி.ஏ.பி., யூரியா தட்டுப்பாடில்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டும். டீசல் விலை உயர்வால் டிராக்டர் வாடகை உயர்ந்துள்ளதால், அதற்கான மானியம் வழங்க வேண்டும்.
கூட்டுறவு மற்றும் தேசியமய வங்கிகளில் 27 சதம் விவசாயிகளுக்கு மட்டுமே பயிர்க் கடன் கிடைக்கிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி முழுமையாகப் பயிர்கடன் வழங்க வேண்டும்.
தொழில்சாலைகள் அமைப்பதற்கும், தொழில் வளர்ச்சி என்ற பெயரிலும் வேளாண் நிலங்களைப் பறிப்பதைத் தடை செய்ய தமிழக அரசு சட்டம் இயற்ற வேண்டும்.
தமிழக நிதிநிலை அறிக்கையில் வேளாண் துறைக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். நிகழாண்டு பயிர்க் காப்பீடு குறித்த அறிவிப்பை தமிழக அரசு உடனடியாக வெளியிட வேண்டும்.
காவிரி டெல்டா பகுதியில் தூர்வாரும் பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. பொதுப் பணித் துறை மூலம் நடைபெறும் இந்தப் பணியைக் கண்காணிக்க விவசாயிகளை உள்ளடக்கிய கண்காணிப்புக் குழுக்கள் அமைக்க வேண்டும் என்றார் சண்முகம்.
பேட்டியின் போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலர் கோ. நீலமேகம், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் சாமி. நடராஜன், மாவட்டத் தலைவர் கே. காமராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

---

## விவசாய நிலங்களில் தோட்டக் கலை கல்லூரி மாணவிகள் ஆய்வு

First Published : 23 Jun 2011 12:04:11 PM IST

போடி, ஜூன் 22: போடி பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் தோட்டக் கலை கல்லூரி மாணவிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.
பெரியகுளம் தோட்டக் கலை கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகள் 4-ம் ஆண்டு படிக்கும்போது கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். இதில் விவசாய நிலங்களில் நேரடி பயிற்சி வழங்கப்படும்.
இந்த ஆண்டு பெரியகுளம் தோட்டக் கலை கல்லூரி மாணவிகள் பலர் போடி பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.
மாணவி எம்.இந்துமதி போடி அணைக்கரைப்பட்டி கிராமத்தில் தங்கி மா பயிர் பற்றி ஆய்வுசெய்து வருகிறார். மாணவி கே.பி.ஐஸ்வர்யா உப்புக்கோட்டை கிராமத்தில் தங்கி வாழை பயிர் குறித்தும்,

மாணவி எ.ஜாஸ்மின் செடி முருங்கை பற்றி சிலமலை கிராமத்திலும், மாணவி ஜெ.ஐ.ஜெர்ஜின் கொட்டைமுந்திரி குறித்து ராசிங்காபுரத்திலும், மாணவி கனிமொழி கோகோ பயிர் குறித்து போடியிலும், மாணவி கார்த்திகாயினி நெல்லி பயிர் குறித்து சோலையூர் கிராமத்திலும் தங்கி ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் விவசாயிகளிடம் பயிர் வளர்ச்சி, பயிர்களில் தாக்கும் நோய்கள், ஊடு பயிர்கள் குறித்த விவரங்களை சேகரிப்பதுடன், விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப தகவல்களை அளித்து உதவுகின்றனர். இப்பயிற்சி ஜூலை 8-ம் தேதி வரை நடைபெறுகிறது. மாணவிகளுக்கு போடி தோட்டக் கலை உதவி இயக்குநர் கெர்சோன் தங்கராஜ் மற்றும் அலுவலர்கள் ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

---

## நாளை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

First Published : 23 Jun 2011 11:23:39 AM IST

ஈரோடு, ஜூன் 22: விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (ஜூன் 24) நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் ஆர்.ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற உள்ளது.

இக் கூட்டத்தில், விவசாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்று, தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம் என, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## விவசாயிகளுக்கு நேரில் ஆலோசனை வழங்கும் திட்டம்: ஆட்சியர் ஆய்வு

First Published : 23 Jun 2011 01:01:16 PM IST

புதுக்கோட்டை, ஜூன் 22: புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு வேளாண் துறையினர் நேரில் சென்று விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கும் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ப. மகேஸ்வரி புதன்கிழமை ஆய்வு செய்தார்.

பயிர் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகப்படுத்தி உணவு உற்பத்தியை பெருக்க விரிவாக்கப் பணியாளர்கள் மூலம் விவசாயிகளுக்கு வேளாண் நவீன தொழில்நுட்பங்கள் விரைவாக- நேரடியாக கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று தமிழக முதல்வர் அறிவுறுத்தினார்.

இதனடிப்படையில், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வேளாண்மைத் துறையிலிருந்து உதவி வேளாண்மை அலுவலர்கள் 15 நாள்களுக்கு ஒரு முறை நேரில் பயணம் மேற்கொண்டு விவசாயிகளுக்கு நேரடியாக வேளாண் தொழில்நுட்ப கருத்துகளையும், அரசு செயல்படுத்தும் வேளாண் திட்டங்கள், களப் பணிகள் செய்யும் முறையை மாநிலத்தின் முன் மாதிரியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முறையை செயல்படுத்தும் வகையில், உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு அண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து, புதன்கிழமை அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன்படி மாதத்தில் இரு நாள்கள் உதவி வேளாண் அலுவலர்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் விவசாயிகளை சந்தித்து தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவதுடன், மானியத்தில் இடுபொருள்கள் பெறுவதற்கும் பரிந்துரை செய்வர்.

இந்த நிலையில், புதுக்கோட்டை ஒன்றியம், கவிநாடு மேற்கு, அகரப்பட்டி ஊராட்சியிலும், திருவரங்குளம் ஒன்றியம், கைக்குறிச்சி கிராம ஊராட்சியிலும் நடைபெற்ற வேளாண் உதவி அலுவலர்களின் பணிகளை மாவட்ட ஆட்சியர் ப. மகேஸ்வரி புதன்கிழமை ஆய்வு செய்தார். மேலும், வேளாண் அலுவலர்களின் பதிவேடுகளை ஆட்சியர் பார்வையிட்டார்.

விவசாயிகளின் வயல்களை நேரில் ஆய்வு செய்து வேளாண் தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறுவதுடன், விவசாயிகளின் தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்ய வேண்டும் என்று அலுவலர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார்.

மேலும், அங்கு கூடியிருந்த விவசாயிகளிடம் இந்தத் திட்டத்தால் பயன் கிடைக்கிறதா என்று ஆட்சியர் வினவினார். அதற்கு, தங்களுக்கு மிகவும் பயனுள்ளத் திட்டமாக இருப்பதாக விவசாயிகள் பதிலளித்தனர்.

வேளாண் இணை இயக்குநர் தி. தங்கவேலு, வேளாண் துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) கா. பாலன், நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரா. பூபதிகண்ணன் மற்றும் வேளாண் உதவி இயக்குநர்கள் என். சர்புதீன், கே.எம். ஷாஜகான் மற்றும் எஸ். சுரேஷ்குமார்,வேளாண் அலுவலர்கள் எஸ். ராஜசேகரன், வி. சம்பத்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

---

தினமலர்

## சேலம் வனச்சரகங்களில் ஒன்றரை லட்சம் மரக்கன்றுகள் வளர்க்க வனத்துறை ஏற்பாடு

பதிவு செய்த நாள் : ஜூன் 24,2011,01:45 IST

சேலம்: சேலம் மாவட்டத்தில் உள்ள ஐந்து வனச்சரகங்களில், ஒன்றரை லட்சம் மரக்கன்றுகள் வளர்க்க, வனத்துறை தயாராகி வருகிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளை மேம்படுத்த, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இது குறித்து, மாவட்ட வன அலுவலர் சுகிர்தராஜ் கோயில் பிள்ளை கூறியதாவது: பட்டா நிலத்தில் மரங்களை வளர்க்கும் திட்டத்தை அரசு அமல்படுத்தியுள்ளது. சேலம் மாவட்டத்தில், பட்டா நிலத்தில் மரங்களை வளர்க்க, ஒன்றரை லட்சம் மரக்கன்றுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சில்வர் ஓக், தேக்கு ஆகிய இரண்டு மரங்களின் கன்றுகள் பட்டா நிலம் வைத்துள்ளோருக்கு வழங்கப்படும். சில்வர் ஓக் மரங்கள் ஐந்தாண்டுகளில் பலன் தரக்கூடியது. லாரி பாடி கட்டும் தொழிலில் சில்வர் ஓக் மரங்களின் பங்களிப்பு அதிகம்.

தேக்கு மரங்கள் 20 ஆண்டுக்கு பின், நல்ல பலன் தரக்கூடியவை. தேக்கு மரங்கள் பங்களா மற்றும் வீடு கட்டுவதற்கு முக்கிய இடத்தை வகிக்கிறது. ஏற்காடு வனச்சரகம், சேர்வராயன் தெற்கு சரகம், வடக்கு சரகம், டேனிஸ்பேட்டை சரகம் மற்றும் மேட்டூர் வனச்சரகத்தில் உள்ள நர்சரிகளில் தேக்கு, சில்வர் ஓக் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இரண்டடி உயரம் வளர்ந்தவுடன் அவை பட்டா நிலம் உள்ளவர்களுக்கு வழங்கப்படும். சொந்தமாக நிலம் வைத்திருப்போர், சிட்டா அடங்கலை வனத்துறையினரிடம் காண்பிக்க வேண்டும். அதன் பின், அவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படும். ஒரு ஏக்கருக்கு, 200 மரக்கன்றுகள் வழங்கப்படும். ஒரு நபருக்கு அதிகபட்சமாக, 500 மரக்கன்றுகள் வழங்கப்படும். மரக்கன்றுகளை உரிய முறையில் பாதுகாப்புடன் வளர்த்து வர வேண்டும். ஆறு மாதத்துக்கு ஒரு முறை வனத்துறையினர் மரம் வளர்க்கும் இடத்தை தணிக்கை செய்ய வருவர். மரங்களை சரியான முறையில் வளர்த்திருந்தால், அவர்களுக்கு மரத்துக்கான பராமரிப்பு செலவை, வனத்துறை வழங்கும். சேலம் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. காட்டில் வாழும் விலங்குகள் மற்றும் பறவைகளை துன்புறுத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

---

## மஞ்சள் பயிரில் அழுகல்நோய் கட்டுப்படுத்தும் வழிமுறை

பதிவு செய்த நாள் : ஜூன் 24,2011,01:36 IST

ராசிபுரம்: "மஞ்சள் பயிரில் அழுகல் நோய் வராமலிருக்க விதை நேர்த்தி செய்ய வேண்டும்' என, நாமகிரிப்பேட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், மஞ்சள் நடவு செய்யும் பணி நடந்து வருகிறது. நடவு செய்து இரண்டு அல்லது மூன்று மாதம் வரை மஞ்சள் பயிரில் அழுகல் நோய் தாக்குதல் வராமலிருக்க, காப்பர் ஆக்ஸிகுளோரைடு பூஞ்சாணக் கொல்லி மருந்து விதை நேர்த்தி செய்து நடவு செய்ய வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு, மூன்று கிராம் காப்பர் ஆக்ஸி குளோரைடு என்ற விகிதத்தில் கரைசல் தயார் செய்து, அதில் விதை மஞ்சளை, 20 நிமிடம் நன்கு ஊற வைத்து, பின் நிழலில் உலர்த்தி வயலில் நடவு செய்ய வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு இரண்டு மெட்ரிக் டன் விதை மஞ்சள் தேவைப்படும். மேலும், கடைசி உழவுக்கு முன் ஹெக்டேருக்கு, 10 மெட்ரிக் டன் தொழுஉரம் மற்றும், 200 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும். ஹெக்டேருக்கு, 55கிலோ யூரியா, 336 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும், 30 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும். வரிசைக்கு வரிசை, 50 செ.மீ., இடைவெளி வரிசையில், 15 செ.மீ., இடைவெளிக்கு ஒரு விதை

மஞ்சள் என்கிற விகிதத்தில், 4 செ.மீ., ஆழத்தில் விதை மஞ்சளை நடவு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## தென்னை சாகுபடிக்கு நல்ல கன்றுகள் தேர்வு அவசியம்

பதிவு செய்த நாள் : ஜூன் 24,2011,00:18 IST

தர்மபுரி: ""தென்னை சாகுபடி விவசாயத்தில் நல்ல நாற்று கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும்," என உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் தெரிவித்தார். தர்மபுரி வேளாண் இயக்குனர் அலுவலகத்தில் உழவர் பயிற்சி நிலையம் சார்பில் தென்னை மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு குறித்த பயிற்சி நடந்தது. வேளாண் இணை இயக்குனர் மனோகரன் பயிற்சியை துவக்கி வைத்தார். வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் தென்னையில் அதிக விளைச்சலுக்கான சாகுபடி தொழில் நுட்பம் குறித்து பேசியதாவது:
இந்தியாவில் தென்னை அதிக பரப்பில் பயிர் செய்யப்படுகிறது. 43 சதவீதம் கேரளாவிலும், 28 சதவீதம் தமிழகத்திலும் பயிர் செய்யப்படுகிறது. தென்னை ஒரு கற்பக விருச்சக மரமாகும். பல ஆண்டு பயிரான தென்னை பயிடரிடும் போது, விவசாயிகள் முக்கியமாக கவனிக்க வேண்டியது நடவுக்கு இளம் கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும். அதிக காய்ப்பு திறன் கொண்ட 35 ஆண்டுக்கு மேல் முதிர்ந்த மரத்தில் இருந்து காய்களை தேர்வு செய்து முளைக்க வைத்த கன்றுகளை 3 அடி நீளம், அகலம் மற்றும் ஆழம் கொண்ட குழிகளை அமைத்து, கன்றுகளை அதன் நடுப்பகுதியில் நடவு செய்து பராமரிப்பு செய்ய வேண்டும். தென்னைக்கு உரிமிடுதல் காய்க்கு மிகவும் அவசியமாகும். ஐந்து ஆண்டுகள் வளர்ந்த மரத்துக்கு உர அளவாக 1.3 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட், 2 கிலோ பெட்டாஷ் மற்றும் 50 கிலோ மத்திய தொழு எரு ஆகியவை ஒரு ஆண்டுக்கான உர அளவை இரண்டு முறையாக பிரித்து இட்டு நீர் பாய்ச்சிட வேண்டும். தென்னை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த தென்னை ஓட்டுண்ணிகள் விட்டு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும். இதன் மூலம் தென்னையில் அதிக உற்பத்தியை பெருக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார். தென்னை மதிப்பூட்டு பொருட்கள் தயாரிப்பு செயல்விளக்க பயிற்சியை கேரளா மாநிம் தென்னை வளர்ச்சி வாரிய முதன்மை பயிற்சியாளர்கள் அமுதவள்ளி, சிவசங்கரி, சரோஜா, உமாமகேஸ்வரி, அருள்மணி மற்றும் மதியழகன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். தேங்காய் சீப்ஸ் தயாரித்தல், இளநீர் பதப்படுத்தல், வினிகர் தயாரித்தால், தேங்காய் பால்கேக், லெமனாய்டு, தேங்காய் ஜாம், தேங்காய் சட்டி பவுடர், தேங்காயம் ஊறுகாய், தேங்காய் உருண்டைகள், தேங்காய் லட்டு, தேங்காய் பருப்பிகள் ஆகிவை தயாரித்து செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இரண்டு நாள் நடந்த பயிற்சியில் 15 பேர் கொண்ட ஏழு குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 105 விவசாயிகள் பங்கேற்று பயிற்சி பெற்றனர். ஏற்பாடுகளை உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் அமுதவள்ளி செய்திருந்தார்.

---

## வெள்ளாடு வளர்க்க அறிவுரை

பதிவு செய்த நாள் : ஜூன் 24,2011,01:06 IST

திருப்பூர் : வெள்ளாடு வளர்ப்பு குறித்த சிறப்பு முகாம், கால்நடை பல்கலையில் நடந்தது.மருத்துவ ஆராய்ச்சி பல்கலை தலைவர் செல்வராஜ் பேசியதாவது: நம்மூரில் உள்ள தட்பவெப்ப சூழ்நிலையில் வளரக்கூடிய ஆடுகளை தேர்ந்தெடுத்து வாங்க வேண்டும். பலர் இறைச்சி மற்றும் தோல் விலை கருதி, வெளிநாடு ரக ஆடுகளை வாங்குகின்றனர். ஆசைக்காக வாங்கப்படும் ஆடுகளை இங்குள்ள

காலநிலைக்கு வளர்ப்பது சிரமம். தமிழகத்துக்கு உகந்த, கன்னி ஆடு, தலைச்சேரி இன ஆடு மற்றும் வெள்ளாடுகளை வளர்க்க வேண்டும். பெரிய காதுகளை கொண்டதால் பலர், ஜம்முனாபேரி ஆட்டை வாங்குகின்றனர். இவை கொழுப்பு சத்து நிறைந்தது. ஆடுகளில் தலை சிறியதாகவும், வயிறு மற்றும் பால் மடி பெரியதாக இருக்க வேண்டும். அப்போது தான், இரண்டு குட்டிகள் பிறக்கும்போது பிரச்னையின்றி பால் சுரக்கும்; குட்டிகளை காப்பாற்றவும் முடியும். ஆடு கட்டப்பட்டிருக்கும் இடம், கொட்டகை, பட்டி ஆகியவற்றை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். அவற்றின் கழிவில் இருந்து வரும் துர்நாற்றம், ஆடுகளுக்கு நோயை ஏற்படுத்தும். காலை, மாலை என இரண்டு நேரமும் சுத்தம் செய்ய வேண்டும். வாரம் ஒரு தடவை குளிப்பாட்ட வேண்டும். வைட்டமின் "ஏ' நிறைந்த உணவுப்பொருட்களை கொடுப்பது நல்லது, என்றார்.

---

## முருங்கை விலை ஏறுமுகம்

பதிவு செய்த நாள் : ஜூன் 24,2011,02:04 IST

ஒட்டன்சத்திரம் : வரத்து குறைந்ததால் ஒட்டன்சத்திரத்தில் முருங்கை விலை, கிலோவிற்கு மூன்று ரூபாய் அதிகரித்துள்ளது.சுற்றுப் பகுதிகளில் விளையும் முருங்கை இங்குள்ள சந்தையில் விற்கப்படுகிறது. கடந்த சில நாட்களாக இறங்கு முகமாக இருந்த முருங்கை விலை தற்போது, ஏறுமுகமாக உள்ளது. நேற்று முன்தினம் 16 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ செடி முருங் கை, நேற்று 19 ரூபாய் ஆனது. வெண்டைக்காய் விலையும் அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் கிலோ 16 ரூபாய்க்கு விற்ற வெண்டைக்காய், நேற்று இரண்டு ரூபாய் அதிகரித்தது. மற்ற காய்களின் விலையும் ஏறுமுகமாக உள்ளது.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *வெள்ளகோவிலில், 5–ந்தேதி நடக்கிறது*

## *தமிழக விவசாயிகள் சங்க மாநாடு*

*சோமனூர்,ஜூன்.24–*

*தமிழக விவசாயிகள் சங்க மாநாடு வெள்ளகோவிலில், 5–ந்தேதி நடக்கிறது.*

*இதுகுறித்து கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் கோவை மாவட்ட தலைவர் ஏ.கே.சண்முகம் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–*

மாநாடு
1970 ஆம் ஆண்டு மற்றும் 1972–ம் ஆண்டுகளில் விவசாய மின்கட்டண பிரச்சினையின் போது அரசிடம் போராடிய உயிர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக 1972–ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 5–ந்தேதி விவசாயிகள் சங்கம் மாநாடு நடத்தி உயிர்நீத்த தியாகிகளின் தியாகத்தை நினைவு கூர்ந்து வருகின்றோம்.
அதே போல் இந்த ஆண்டும், கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் வருகிற ஜூலை 5–ந்தேதி திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவிலில் விவசாயிகளின் பேரணியும், மாநாடும் நடைபெறுகிறது.
அழைப்பு
மாநாட்டிற்கு கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க தலைவரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான என்.எஸ்.பழனிசாமி தலைமை தாங்குகிறார். மாநாட்டில் கொங்கு வேளாள கவுண்டர்கள் பேரவையின் பொதுச்செயலாளரும், தமிழ் தேசிய கட்சியின் பொதுச்செயலாளருமான ஆடிட்டர் மு.பாலசுப்பிரமணியம், தமிழ்நாடு கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி, தமிழ் தேசிய கட்சியின் மாநில பொருளாளர் அரங்க சுப்பிரமணியம் மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள். அந்த சமயம் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகள் ஒருங்கிணைந்து வெள்ளகோவில் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.
மேற்கண்டவாறு அந்த அறிக்கையில் அவர் கூறி உள்ளார்.

---

## குன்னூர் கூட்டுறவு ஏல மையத்தில்

## இலை ரக தேயிலை தூளுக்கு கிராக்கி அதிகரிப்பு

குன்னூர், ஜூன்.24–
குன்னூர் கூட்டுறவு ஏல மையத்தில் வர்த்தகர்கள் இடையே இலைரக தேயிலை தூளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டு உள்ளது.
14 தொழிற்சாலைகள்
நீலகிரி மாவட்டத்தில் 14 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் உள்ளன. தொழிற் சாலைகளில் உறுப்பினர் களாக உள்ள சிறு தேயிலை விவசாயிகள் தங்களது தோட் டத்தில் உள்ள பச்சை தேயி லையை வினியோகம் செய் கின்றனர்.
கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் உற்பத்தி செய் யப்படும் தேயிலை தூள் குன் னூர் இன்கோசர்வ் வளாகத் தில் உள்ள டீசர்வ் ஏல மையத் தில் ஏலம் விடப் படுகிறது. ஏல மையம் கம்ப்யூட்டர் மையமாக்கப்பட்டுள்ளதால் ஆன்லைன் மூலம் தேயிலை வர்த்தகம் நடைபெறுகிறது.
ஏற்றுமதி
விற்பனை எண் 25–க்கான ஏலம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 4 லட்சத்து 46 ஆயிரத்து 335 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 1

லட்சத்து 90 ஆயிரத்து 644 கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 56 ஆயிரத்து 686 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.
ஏலத்தில் கடந்த வாரத்தை போன்றே உள்நாட்டு வர்த்த கம் களை கட்டி இருந்தது. ஏற்றுமதி வர்த்தகர்களும் ஆர்வமுடன் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்தனர்.
டஸ்ட் ரகம்
ஏலத்தில் இலை ரக தேயிலை தூளிற்கு அதிக கிராக்கி இருந்தது. இதன் காரணமாக மொத்த இலை ரக தேயிலை தூளில் 95 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. டஸ்ட் ரகத்திற்கு கிராக்கி குறைந்த அளவுதான் இருந்ததால் 65 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.
ஏலத்தில் தேயிலை தூள்களின் ரகங்களுக்கு 2 ரூபாய் முதல் 4 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டது. சராசரியாக இலைரகத்தின் சாதாரண வகை ரூ.49 முதல் ரூ.51 வரையிலும் விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.50 முதல் ரூ. 53 வரையிலும் ஏலம் சென்றன.
டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.50 முதல் ரூ.53 வரை யிலும் விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.55 முதல் ரூ.65 வரையிலும் ஏலம் சென்றன. விற்பனை எண் 26–க்கான ஏலம் வருகிற 29–ந் தேதி நடக்கிறது. கடந்த 2 வாரங் களாக கூட்டுறவு ஏல மையத்தில் தேயிலை தூள் விலை உயர்வு ஏற்பட்டு வருவது விவசாயி களின் மத்தியில் மகிழ்ச்சி ஏற்படுத்தி உள்ளது.

---